**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE,**
**KANNIYAKUMARI AT NAGERCOIL.**

07.08.2025

O.S. No. 341/2023

P.W.1 திரு. தாணப்பன்

சாட்சி மீண்டும் இன்று அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை (4 ஆம் பிரதிவாதி தரப்பில்) -**

இந்த வழக்கில் சாட்சி சொல்வதற்கு எனக்கு அதிகார பத்திரம் தந்துள்ளார்களா என்றால் தந்துள்ளார்கள். அந்த அதிகார பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் அவ்வாறு அதிகார பத்திரம் எனக்கு கொடுக்கப்பட்டதாக சொல்வது வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. அவ்வாறு அதிகார பத்திரம் இல்லாததால் இந்த நீதிமன்றத்தில் சாட்சியம் அளிப்பதற்கு எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தில் வாதி நிறுவனத்தில வேலை செய்வதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். எத்தனை வருடங்களாக வேலை பார்க்கிறேன் என்றால் 15 ஆண்டுகளாக வேலை பார்க்கிறேன். 1 ஆம் வாதி உமய பாரதிக்கும், 2 ஆம் வாதி கிருஷ்வா பவர் பிரைவேட் லிமிடெட்டுக்கும் என்ன தொடர்பு என்றால் இருவரும் சேர்ந்து தாவா சொத்தை கிரயம் பெற்றுள்ளார்கள். வா.சா.ஆ. 1, 24.01.1998 தேதியிட்ட கிரயபத்திரத்தை படித்துப் பார்த்துள்ளேனா என்றால் படித்துப் பார்த்துள்ளேன். அந்த சொத்தின் முன் பத்திரங்களை அந்த ஆவணத்தின் படி சொத்து வாங்கியவரிடம்

கொடுக்கப்படுவதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த முன் பத்திரங்கள் எங்களிடம் உள்ளதா என்றால் உள்ளது. 1992 பத்திரத்திற்கு முன் பத்திரங்களை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் தாக்கல் செய்துள்ளோம். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் இணைக்கப்பட்டுள்ள ஆவணப்பட்டியலில் அந்த முன் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்து அமைந்துள்ள சர்வே எண். 762/2 ஏ 2 வின் மொத்த விஸ்தீரணம் என்றால் 5 ஏக்கர் 4 சென்ட் என்று வா.சா.ஆ.1ல் குறிப்பிடப்பட்டுள்ளது. 6 ஏக்கர் 54 சென்ட் சர்வே எண். 762/2 ஏ 2 வின் பழைய சர்வே எண். 592 என்றால் சரிதான். அந்த பழைய சர்வே எண். 592 ன் மொத்த விஸ்தீரணம் 6 ஏக்கர் 54 சென்ட் என வா.சா.ஆ.1ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் அவ்வாறு மொத்த விஸ்தீரணமான 6 ஏக்கர் 54 சென்றில் கிழக்கனைய 1 ஏக்கர் 50 சென்ட், ரீசர்வே எண். 762/2 நம்பரில் 2 ெஹக்டேர் 4.5 ஏர் உள்ளதில் கிழக்கனை ய 1 ஏக்கர் 50 சென்றுக்கு 61 ஏர் புரையிடமும் என சொத்தின் விவரம் தெளிவாக குறிப்பிடப்பட்டள்ளது என்றால் சரிதான். அவ்வாறு கிரயம் பெற்ற சொத்தானது எங்கு உள்ளது என காண்பிப்பதற்கான வரைபடம் எதுவும் வா.சா.ஆ. 1 உடன் இணைக்கபடவில்லை என்றால் சரியல்ல, இணைக்கப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் வா.சா.ஆ. 1 வரைபடம் இணைக்கப்பட்டுள்ளதாக எங்காவது சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லப்படவில்லை. வா.சா.ஆ. 1 ல் வரைபடம் இல்லை என்றால் சரிதான். வழக்கின் வாதிகளின் முன் உரிமையாளர் சர்வே எண். 762 ல் 1 ஏக்கர் 50 சென்றுதான் வாங்கியுள்ளார் என்றால் சரிதான்.

வா.சா.ஆ. 2 ஆவணத்திலும் வா.சா.ஆ. 1 ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள சொத்து விவரங்கள்தான் கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த இரண்டு ஆவணங்களிலும் அந்த சொத்தின் நான்கு பக்க எல்கைகளில் உள்ள சொத்துக்கள் யார் அனுபவத்தில் உள்ளது என்று குறிப்பாக சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல, சொல்லப்பட்ள்ளது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ. 1 மற்றும் வா.சா.ஆ. 2 ஆவணங்களிலும் எல்கைகள் சர்வே நம்பர்தான் சொல்லப்பட்டுள்ளது என்றாலும் யாருடைய அனுபவத்தில் இருக்கிறது என குறிப்பாக சொல்லப்படவில்லை என்றாலும் சரிதான். வாதிகள் சொத்து வாங்கிய பிறகு உடனடியாக பட்டா மாற்றம் செய்து வாங்கி விட்டோமா என்றால் வாங்கி விட்டோம். வா.சா.ஆ. 14 ஆக நாங்கள் தாக்கல் செய்துள்ள கூட்டுப்பட்டாவில் எங்களுக்கு எந்த ஆண்டு பட்டா வழங்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 15.03.2023 அன்று வழங்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. எங்களுடைய முன் உரிமையாளரிடம் அவ்வாறு 1 ஏக்கர் 50 சென்ட் நிலம் இருந்ததாக காட்டும் வேறு பட்டா எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எங்களது முன் உரிமையாளர்கள் சொத்தை வாங்கியவுடன் பட்டா மாற்றம் செய்து, சொத்தை அளந்து பார்த்து திட்டப்படுத்தவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு திட்டப்படுத்ததால்தான் அவர்கள் பெயரில் உள்ள பட்டா எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கின் வாதிகளோ, முன் உரிமையாளர்களோ சொத்தை விலைக்கு வாங்கியவுடன் பட்டா மாற்றம் செய்து, புல வரைபடத்தில் மாற்றங்கள் செய்து வாங்காத காரணத்தினால்தான் அந்த ஆவணங்களை இந்த நீதிமன்றத்தில்

தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. சர்வே எண். 762/2 என்பது உட்பிரிவு செய்யப்பட்டு சர்வே எண். 762/2 ஏ 2 என ஆகிவிட்டது என்றால் சரிதான். சர்வே எண். 762/2 ல் நாங்கள் வாங்கிய சொத்தது மற்றும் வேறு சொத்தும் இருந்ததால்தான் அவ்வாறு உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆரோ மிரா பயோ சிஸ்டம்ஸ் கன்னியாகுமரி பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனம் IDBI வங்கிக்கு எழுதி கொடுத்திருந்த ஆவணத்தை வா.சா.ஆ. 3 ஆக தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் 2008 முதல் அந்த சொத்து யார் யார் உரிமையில் இருந்தது என்ற விவரம் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ. 3 ஆவணத்தில் Item 4 ஆக சர்வே எண். 762/2 ம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண். 762/2 ல் ஆரோ மிரா பயோ சிஸ்டம்ஸ் கன்னியாகுமரி பிரைவேட் லிமிடெட்டுக்கும் சொத்து இருந்ததால்தான் அவர்கள் IDBI வங்கிக்கு அடமானம் வைத்திருந்தார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ. 3 ஆவணத்தின் அடிப்படையில்தான் 1 மற்றும் 2 ஆம் பிரதிவாதிகள், ஆரோ மிரா பயோ சிஸ்டம்ஸ் கன்னியாகுமரி பிரைவேட் லிமிடெட்டுக்கு கடன் வழங்கியிருந்தார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள உஷா மற்றும் பலர் கேசவன்பிள்ளைக்கு எழுதி கொடுத்துள்ள பொது அதிகார பத்திரத்தில் சர்வே எண். 762/2 சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பத்திரத்தில் Item No. 6 ஆக சர்வே எண். 762/2 ல் 70 சென்ட் கிழக்கனைய உரிமைபட்டது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வா.சா.ஆ. 4 ஆவணத்தில் அவ்வாறு பொது அதிகாரம் எழுதிகொடுத்த நபர்களுக்கு அந்த சொத்து குறித்து பட்டாவும்

இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதேபோல அவர்கள் அரசாங்காத்திற்கு தீர்வையும் செலுத்தி, அந்த கரத்தீர்வையும் வா.சா.ஆ. 4 ஆவணத்தில் சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ. 5 படி இந்த வழக்கின் வாதிகள் வா.சா.ஆ. 4 பொது அதிகார பத்திரம் மூலம் கேசவன்பிள்ளையிடமிருந்து தாவா சொத்தை கிரயம் பெறுகிறார்கள் என்றால் சரிதான். சர்வே எண். 762/2 ல் உள்ள சொத்து விவரங்களை அந்த ஆவணத்தின் Item No. 1 சொத்தாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ- 5 ஆவணத்திலும் அந்த சொத்தின் 4 எல்கைகளில் உள்ள சொத்துக்களின் உரிமையாளர் பெயர்கள் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அதேபோல அந்த சொத்துக்களின் உரிமங்களை பேரூராட்சியிடமிருந்து வா.சா.ஆ. 6 மூலம் 18.07.2022 அன்று வாங்கியுள்ளோம் என்றால் சரிதான். 18.07.2021 ல் பேரூராட்சியிடமிருந்து அனுமதி வாங்குவதற்கு முன்பாக சொத்து எங்கள் கைவசம் இருந்ததாக காட்டுவதற்கு என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளோம் என்றால் அவ்வாறு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. வா.சா.ஆ. 9 ஆக குறியீடு செய்யப்பட்டள்ள 1, 2 பிரதிவாதிகள், 4 ஆம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்துள்ள விற்பனை சான்றிதழிலும், மேற்சொன்ன சர்வே எண். 762/2 ல் சம்பந்தப்பட்ட அதே விவரங்கள் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ. 9 ல் சர்வே எண். 762 ல் 4 ஆம் பிரதிவாதி கிரயம் வாங்கிய சொத்தின் வரைபடமும் இணைக்கப்பட்டுள்ளது என்றால்சரிதான். கன்னியாகுமரி மாவட்ட தலைமை குற்றவியல் நீதிமன்றத்தில் 1 மற்றும் 2 ஆம் பிரதிவாதிகள் அதே சர்வே எண்களை சொல்லி தான் SARFAESI Act கீழ் உத்தரவு பெற்றுள்ளார்கள்

என்றால் சரிதான். அந்த நீதிமன்றத்தால் அந்த உத்தரவு வழங்கப்பட்ட பிறகுதான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். 19.07.2023 ல் அந்த உத்தரவு வழங்கப்பட்டது என்றால் சரிதான். ஆனால் நாங்கள் இந்த வழக்கை 15.11.2023 தான் தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். இந்த வழக்கின் 4 ஆம் பிரதிவாதியை கஷ்டப்படுத்த வேண்டும் என்பதற்காகதான் அந்த உத்தரவுக்கு 4 மாதம் கழித்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 11 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ள 19.07.2023 ஆம் தேதியிட்ட அந்த உத்தரவு எங்களுக்கு எப்போது தொியவந்தது என்றால் உடனடியாக தொிய வந்தது. எங்களுக்கு இந்த சொத்தில் உரிமை உள்ளது என்ற நிலையில் இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு ஏற்பட்ட கால தாமத்திற்கு என்ன காரணம் என்றால் வழக்கை தயார் செய்து தாக்கல் செய்துவிட்டோம். அதற்காக கால அவகாசம் தேவைப்பட்டது. 4 ஆம் பிரதிவாதியை கஷ்டப்படுத்த வேண்டும் என்பதற்காகதான் அதுவும் 4 ஆம் பிரதிவாதியின் அனுபவத்தை தொந்தரவு செய்ய வேண்டும் என்பதற்காகவும் அவ்வாறு வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. 06.11.2023 க்கு முன்பாக வாதிகளுக்கோ, அவர்களின் முன்னோர்களுக்கோ சொத்து சம்பந்தமாக எந்த ஒரு கரத்தீர்வையும் கிடையாது என்றால் சரியல்ல. எங்களிடம் உள்ளது, தாக்கல் செய்யவில்லை. அவ்வாறு எங்களிடம் எந்த வருவாய் துறை ஆவணங்களும் இல்லாததால்தான் பிராதுடனோ, அல்லது பிரமாண வாக்குமூலத்திலோ அந்த ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, எல்லாமே உள்ளது. எங்களுக்கோ, முன் உரிமையாளருக்கோ இந்த சொத்து சம்பந்தமாக அனுபவம்

இல்லாததால்தான் எந்த ஒரு கரத்தீர்வையும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் வழக்கின் வாதிகளக்கு ஒரு போதும் உரிமையும், அனுபவமும் கிடையாது என்றால் சரியல்ல. இந்த வழக்கின் 4 ஆம் பிரதிவாதி, 1 மற்றும் 2 ஆம் பிரதிவாதிகளுக்கு உரிய தொகையை செலுத்தி தான் தாவா சொத்தை சட்டப்படி அனுபவதித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. உண்மைக்கு மாறான காரணங்களை சொல்லி அவருடைய அனுபவத்திற்கும், உரிமைக்கும் இடையூறு செய்வதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்து நடத்தி வருகிறோம் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் எந்த நிவாரணமும் வாதிகளுக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.